ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

திருவண்ணாமலை தாலுக்கா தடாகநகரமென்னும்
பெருங்கொளத்தூர்

# வேணுகோபாலசுவாமி அந்தாதி

640
1-12
MADRAS

இஃது

ஷை தாலுக்கா பெருங்கொளத்தூரிலிருக்கும் வேணு
கோபாலசுவாமி ஆலயதர்மகர்த்தராகிய ம-ள-ள-ஸ்ரீ
ஹரிபானுசாமிசெட்டியார் கேட்டுகொண்டபடி
திருக்கோவிலூர் தாலுகா திருவண்ணைநல்லூர்
சிவாநந்தசுவாமிகள் மரபினராகிய வில்வக
ணிவிணை தீர்த்த ஆசாரியார் குமாரராகிய
மகா-ள-ள ஸ்ரீ வீராசாமி ஆசாரியார்
இயற்றிய வேணுநாதந்தாதி எட்
டுபிரியில் இருந்ததை ஷை ஹரி
பானுசாமிசெட்டியார் பொ
ருளுதவிசெய்து கேட்டுக்
கொண்டபடி
கள்ளக்குரிச்சி தாலுக்கா
தியாகதுர்கத்திலிருக்கும் ம-ள-ள ஸ்ரீ
அருணாசலகிராமணி குமாரர் மகா-ள-ள-ஸ்ரீ
முருகேசகிராமணியார் சகல சுதந்தரத்துடன்
பெற்றுக்கொண்டு பலவித்வான்களால் பரிசோதித்து

---

திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
1912.

Q22:417.2114TV
N12
85489

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீவேணுநாதந்தாதி

திருவாழ் பெருங்கொளத்தூர் ஸ்ரீவேணு நாதன்மேல்
ஒருநா பாட்டந்தாதி ஓதுதற்கு வருவாய்நீ
கம்பி துதிக்கனினை நாடாது எக்காலும்
தும்பிக்கை யாழ்வான் துணை 1.

துணைதந் தருளுந்தவ சுகவனு மாழ்வாரோட்
பணைமாமுடிகள் பரிவார்முன் இணைவிடகா
யெண்ணாளும் போற்றி இறஞ்சரிமேலந்தாதி
குண்ணா துதிக்கருள் வாக்குள் 2.

சூரிக்குஞ் சுதர்சனகிரி கோவலூர் தென்பாரீர்
ஏரிக்கும பிணாகினிதெற்கில் மதில்பெருகி திருக்கில்லா
புஷ்க்கறணிவேணுவன்மேல் புகன்றிடவுமந்தாதி
நிஷ்க்கருள்ளோர் தாசறடிநேர் 3.

நேர்பார் பெருங்கொளத்தூர் நிலங்கொள்வளமானகரம்
சேர்வா மனைசுற்றி மிசைந்திடவும் கோர்வைமிகு
நித்திய வாத்தியத் தொனியும் நிரைந்தவரிவேணுவர்க்கே
சித்திரங்கொள் நன்னகப்பார் சீர் 4.

சீரோங்கி மெய்வளரும் சிரந்ததடாகநகர்
பாரோங்கும் வேணுகோபாலரின்மேல் பேரோங்கும்
பாடிடவுமந்தாதி பன்னிருவாழ் வார்பதத்தை
நாடிடுவோம் தோத்திரத்தினால் 5.

நாறணனே நற்றிருவாள் நாயகனே ஆழ்வாரின்
பூறணனே புஷ்க்கறணிபுரியோனே காறணனே
வெண்டாமரைக் கறத்தில் வேணுநாதக் குழல்கொள்
தண்டாமரைப் பதத்தைதா 6.

தாதாநீ எந்தையர்க்கும் தந்தைபிதாதனக்கும்
மூதாதை நீயன்றி முகிவேது சீதா
முகுந்தா பெருங்கொளத்தூர் முறளினாதப்பறனே
சுகுந்தா யெனக்கமுர்த சொல் 7.

சொல்லரியேனின்னடியைச் சூட்டித்தினஞ் சிறசில்
நில்லரியேன் வல்லோர் நிறைசபையிற் புல்லரியேன்

வத்தாத் தடாகநகர் வாழ்குழல்[illegible]க யேந்தினவா
முத்தாமுராரே முகுந்தா 8.

முகுந்தாமிகத்திருவாய் மூவர்க்கருள் மூலமாப்
மகிழ்ந்தாதரித்தருளு மாதவா ஜெகந்நாதன்
நிரையுந்தடாகநகர் நீணிலம்வாழ் வேணுதேவநான்
மறையுந்துதிக்க புரிவா 9.

85489

வரதா தடாநகர்வாழ் குழலக் கையேந்தி
தேவர்குழல்பிடும் ஸ்ரீஹரியே கோவே
யாவருக்கும் சேவைதரும் ஆதிமூலப்பொருளே
மூவருக்குள் நீமுதல் 10.

முதலைதனையேவீழ்த்தி மூலமென் றோலமிடும்
மதிகொள் கஜேந்திரனை காற்றமாதவனே விதையனென்முன்
வந்தருள்வாய் பெருமை மகிழுந்தடாகநகர்
எந்தன்யிடர் தீர்த்திடவே யின்று 11.

இன்றறிந்தே னுன்னடிமை யென்றும்விடா தருள்வீர்
குன்றெடுத்து மேற்குடையாய் கொண்டவனே அன்றிருந்து
வந்தாய்தடாகநகர் வாமனவாய் வேணுதொனி
தந்தாய்ப்பசுகளுக்குதான் 12.

தானம் பலகோடிதான் தயவோ டெய்திடினும்
மோனமனந்தோற்கா மூற்சர்தனை வானமுள
நாளுமருளுதவா மகிழும் பெருங்கொளத்தூர்
ஆளுமதயாநிதியேயாம் 13.

யாமென்று முன்னெழுந்து யாதரிக்குந் தேசிகனே
தாமென்றதுஷ்டர்களை தாழ்த்தினவா ஓமென்ற
முல்வாநீ யெட்டெழுத்து மொழியுள்யடங்கினவா
இதுவே தடாகநகர்யேல் 14.

யெல்லா வகில மெடுத்துண்ட யெம்பெருமான்
பொல்லாதாருள்ளம் புகுவானே நல்லாருள்
இருப்பான் பெருங்கொளத்தூர் ஸ்ரீவேணுநாதனடி
பொருப்பாய் துதிப்பாய் எப்போதும் 15.

போதப்புகழருள்வான் புரிவேதமோதிதொனி
நாதக் குழலோசை நாட்டுவான் பாதமதை
தூக்கியொன்று மேலணைத்து துரைக்குள் தடாகமதில்
தாக்கினின்று ஊதுகின்றான் சாயல் 16.

சாயல்பெருங்கொளத்தூர் சன்னதியின்னேருக
வாய்திறந்து குழல்வைத்தூதும் மாயவனைப்
பெல்லாபசுகூட்ட மிசைந்து வளர்ந்தோங்கும்
பல்லாண்டவன்ரான் பணி 17.

பணிவாயவன்முனே பாகவதநேசர்களே
அணிவாய் திருச்சூர்ணம அனுதினமும் தொனிமேவி
கொழல் பிடிக்குங்கண்ணன் கோவில்பெருங்கொளத்தூர்
மழையைதடுத்தாண்டமால் 18.

மாலாய்மயனே மகிழ்ந்தளித்தயாவையுமே
ஞாலம் தனிலுருப்பு னட்டியர் மூலா
தறணுக்கிபாட்டி தடாகம் தனிர்கார்க்கும்
பரனுகும் வேணுவிவர்யார் 19.

பார்சுமந்தாங்கை பணிந்திவர்தன் தாள்பிடித்து
நேரத்தெடுத்த சுமைநீக்கனவே கோரதற்குள்
மீசுறர்கள் யாவையுமே மெரித்து பெருங்கொளத்தூர்
வாசுரரே கொற்றவனேவா 20.

வாராயோ நின்னடியைவாழ்த்துமுயர் தாசர்கள்முன்
தாராயோ உன்சேவைதனிமுதலே பாராயோ
ஹரிபஜனையாளர் அடர்ந்த பெருங்கொளத்தூர்
மரிவவும் நீவந் தகுழல்மால் 21.

வந்தவனு மனுவின் மரத்தினிலைகளெல்லாம்
எந்தாயுன் மேல்பரித்து விரஞ்சிவிட விந்தையும்நீ
காணாது போல்கண்டாய் கனிவுளத் தடாகமதில்
தோணயக் குழலோட் தொனி 22.

தொனிமிகுத்த வாஞ்சன் சுக்கரீபனூர்சரிதை
கனிமிகுத்து நின்னைக்கரித்தருள மனங்கதித்து
வரவென்றருள்கொடுத்தாய் வாழ்கபெருங்கொளத்தூர்
கொரவொன்றிலாத குழல்கோன் 23.

கோன்சுரர்கள்உன்சேவை கொள்ளுமவர்க்கென்னாளும்
தான் பரமாச்சாரியர் குணர்தாக்காமல் மேன்மையொடு
இருந்தாய் பெருங்கொளத்தூர் இத்தலத்திலுன்சேவை
நிரந்தாய்குழல்கரத்தோட் நீ 24.

நீயேஸ்ரீறங்கன் நெரியும் வாசுரீதவருக்கு
சேயேயெனுள்ளம் சிறந்தவனே வாயால்

மண்ணுண்டகோனே வளரவாழ்பெருங்கொளத்தூர்
பன்ன நடுநாமனுள்நீபார் 25.

பார்க்கடலில்துயின்ற பங்கயனே யெங்கோனே
தீர்க்கமொடு சேவைதருஞ்சேவகனே கார்க்கயென்முன்
வாவாபெருங்கொளத்தூர் வாழ்நகரத் துள்ளுருவம்
தாவாகோழலத்தொனியேதா 26.

தாவியசுஷ்டலெக்ஷிமிகள் தனித்துனக்கு பக்கமுற
கோவியர்கள்மேவிக்குலாவி நிற்க சேவியர்கள்
ஆர்த்தியெடுத்துயர்த்தத்தமர்ந்த தடாகமதில்
மூர்த்திமுதல் வாகுழலோட்முன் 27.

முன்னேயொருமாபலிக்கா முயன்றமுதர் அந்தணுருப்
மன்னவனென்ராய் மகிழ்ந்தான் மானிலத்தை தன்னடிக்குள்
வைத்துமெரித்தாய் யொருந்தான் வைத்தாயவன்றலைமேல்
அத்துவித புஷ்க்கறணியான் 28.

ஆளுநகரை யோத்தி யரசன்றசறதர்க்காய்
நாளுநன் றிருமகனுனவின்றவனே தாளும்
தருவாய்பெருங்கொளத்தூர் தங்கதிருவாழ்வான்மேல்
வருவாய்குழலோசை யோட் 29.

ஓசைக்குழல்கேட்டு உகந்துகோவேஸ்ரீயெல்லைம்
பூசல் மிகித்தெமனு பொற்கரைமேல் வாசமிகும்
நாளதலிம்சேவைதரும் நாதாபெருங்கொளத்தூர்
தாளதனை தாயெனக்குதான் 30.

தத்தளித்துவன்னுளில் தாவியந்தபூதகிபால்
கைத்தலத்தினுலழித்திக் கசப்பையுண்டா மெய்த்தலத்துக்
கொப்பாகுமித்தலமும் மேன்மைதடாகநகர்
யெப்போதும் வெண்குழல்கைமேல் 31.

மேல்பதத்துக்காளனுநீ மிறவாபழம்பொருள்நீ
கால்பதத்துக்காலமைக்கும் நாட்டாநீ சேலையெடுத்
தோகையரைக்கைக்கொண்ட சுகவா தடாகநகர்
யோகவனே வேண்குழல் உன் ஊர் 32.

ஓன்ஊர் உனக்கென்று யுகன்றவரிபாலனுக்கு
தன்னூர் கொடுத்தருளத் தாங்குமே பன்னீரு
வாழ்வார்கள் போற்றும் வளரக்கொள்பெருங்கொளத்தூர்
சூழ்வார்கள் உன்னுட் சுகம் 33.

சுகமாய் கையால்மெலிந்து சோம்பியுந்தன மெய்படியே
பகைமாதரால் விண்டுபாடினின்றேன் தெகையாமல்
மெய்யடியை தாராயோ மேன்மைபெருங்கொளத்தூர்
கையினின்வெண்குழலோட்கார் 34.

கார்க்குந்து வாறகர்க்கு கடிந்துஉந்தன் வாய்மொழியார்
ஏர்க்கப்பிடிசாப மீந்தனயே சீக்றமுடன்
வந்தான் பகைத்தவனுய் வாட்டியனுட் நாட்டிநின்ற
சிந்தா தடாகனே வேண்சீர் 35.

சீருமிறணியனே ஜெனித்து கல்தூணிலுரு
கோரம்பெருத்த வரிக்கொண்டவனே பூரும்
நெகக்கரத்தினல்குடலை நெருக்கிதடாகமதில்
சோகக்கரத்திலேந்து குழல்ச்சொல் 36.

சொல்லாதச்சொல்லை சொல்லெனவும் மோர்பார்வன்
மல்லாண்டமட்டிவிட மாட்டேனென்று நல்லார்சொல்
அரிநமோவென்றான் றவன்நனையேகார்த்தானே
மரிவுதடாகத்மைந்தமால் 37.

மால்காட்டு மங்கையருள் மயங்கி நெடுநாளிருந்து
மேல்காட்டியுள்ள மிதந்திரந்தேன் கால்காட்டி
கொழுதவோனே கோரும் பெருங்கொளத்தூர்
கழல்போற்றினேனென்னைக்கார் 38.

கார்ப்பதுனது கடனன்றி வேருளதோ
பார்ப்பது வேன் நின்னடியைப்பணிவோற்கு சீர்புகழும்
தருவாய்பெருங்கொளத்தூர் தனிமுதல்வேனுதவொலி
உருவாய் பசுக்கோலோனே 39.

ஊனூந் திருச்சூறனன் முகன்றுளபநாமமொடு
பூனும்படிக்கமைத்து பொந்தியுள்ளும் கானும்
அஷ்டாக்ஷறமந்திரம் அரிந்துகந்து வெண்குழலோட்
இஷ்டாதடாக நகர்யேல் 40.

யேறபெருவேணி சந்தாநீ அத்விதத்துள்
சீரப்பெருக்காமல் சிக்கினின்றேம் தோரப்பார்
உன்னுட் பெருங்கொளத்தூர் உத்தகுழலோசைபெற
நின்னுமமேதுதித்தேன் நேர் 41.

நேரசெமித்து உன்மேல் நெரித்துரைக்கு மாதர்கள்முன்
பாரும் பறந்தாமபாலகன்மேல் தூரு
புகல்வதுவகாதென்றாள் போற்றுமசோதையன்னை
பகலவன்றடாகனென்றாள்பார் 42.

பத்தரை மாத்தாயிரமாத்பதிஞுயிர மாத்தான்
சுத்ததமிகுந்தசுகமாத்தான் அத்விதத்துள்
ளாடும்பராபறனே யாளும்பெருங்கொளத்தூர்
நாடுங்குழலோநயம் 43.

நயமானதங்கம் நாதன்றிருமேனி
வயனையுமின்றாண்ட குணமாயவன்காண் செயல் தருக
நின்றான்பெருங்கொளத்தூர் நெரைந்து விருகைகுழலோட்
குன்றேயெடுத்த திருக்கோன் 44.

கோனிவனேதுவாறகைக்கும் கோமான்பெருங்கோவத்தூர்
மானிவனே வெண்கொழல் கொள்மலர்கறக்கேத்டின் ஏனிவனே
போற்றுதிருப்பதுவும் பொன்னறங்கன் றிருவடியை
யேற்றுதிருப்பதுவும்யேன் 45.

யேனென்று வந்து இரஞ்சிதொழுமையவருக்கு
தானென்றுகார்த்த தயாபறனே கோனென்று
வந்தாய்பெருங்கொளத்தூர் மாதிருவாளோட்நடனம்
தந்தாய்நீவேணுவொடுத்தாள் 46.

தாளுங்கரமுகமும் இர்தயமும்உந்தியொடு
நாளுந்திருவாய்க்கமலம் நவின்யெட்டும் சூழும்
படிக்கொள்பெருங்கொளத்தூர் பஞ்சயினயவெண்குழலோட்
நொடிக்குள் தரித்தவனே நோக்கு 47.

நோக்குவார்க்கென்ஞளும் யோர்வினையும்வாராது
ஆக்குவார்காப்பார் அவனன்றி யோக்கை யுளோர்
ஆர்ச்சொல் பெருங்கொளத்தூர் அரிமுகந்தவேணுவனே
பேர்சொல் ழைப்பாயிப்போது 48.

பொதுவாக வன்ஞளில் புலம்பும் கஜேந்திரனுக்கு
இதவாதிமூலனென்றாழினல் சதையதரா
முதலேதனே கண்டித்தா—முத்தா பெருங்கொளத்தூர்
இதளுதனில்குழல் பெருகுமீசா 49.

பெருகும்பெருமானே பெருமயனே பேறாசசே
உருகும்படிக்கனக உத்தயனே திருவகிலம்
உண்டாய் ஊமைந்தெழுந்தாய் உற்றப்பெருங் கொளத்தூர்
கண்டாய் கொழல்கறத்தோட்கார் 50

கார்க்கிரார் தேவரின்னம் கருணை ஒலிக்காணுமல்
பார்க்கிரார்மாபூத்து பாவலர்கள் வேர்க்கவுமே
இத்தருணம்வேணுவொடு இசைவாய்பெருங் கொளத்தூர்
சுத்தகுணவேதாச்சுகா 51.

சுதராஜனமும்சங்கும் சூழ்கெதையுங் கோதண்டம்
அதர்ச்சியுளபாண மோடைந்தும் கதித்தெடுத்து
பெரியதிருவடிமேற் புகழற்றுளபமாலையொடு
அரிவாழ்த்தடாகமதை ஆள் 52.

ஆள்வாயே பெருங்கொளத்தூர் அரியேநீ பன்னிறெண்டு
வாழ்வார்கள் போற்றவானவரும் தாள்தூக்கி
தங்கம்கிடத்தானே சகஸ்ரசிரமேர்ச்சயனே
செங்கைவளர்வேணிலெலனைச்சேர் 53.

சேர்ந்திருப்பார் உபயதேவியர்கள் கண்களிக்க
தேர்ந்தமரையோர் திருவாய்த்தேன்பொழிய நேர்ந்தவருள்
பெருகும் பெருங்கொளத்தூர் பிரியாப்பசுக்களொடு
வருகுங்குழலானே வாழ்த்து 54.

வாழ்த்தி துதித்தவன்ராள் வாடாமலென்னுளும்
தாழ்த்திச்சிரங் கொடுத்தால் தாங்குவான் பாழ்த்திடுமோ
பரத்வம் இவர்க்குயிது பாத்தியம் பெருங்கொளத்தூர்
திருத்தம்குழலோஸ்திரம் 55.

சிரதாங்குடையானே சேயனு உந்தியில்தா
மரகமலந்தன்னில் வைத்தவனே இரைவனையும்
அய்வேலிகாயுள் அடைந்தவனே வாவென்றாய்
தெப்வாபெருங்கொளத்தூர் தேகா 56.

தேகளூர்தீபத்துள் சிலதீபமா யெழுந்து
வாகாகோபியர் யெவர்க்கும் வாய்த்தவனே போகா
பொருளானே பொன்னறங்கம் புரியாபெருங்கொளத்தூர்
அருள்வானே குழல்னெனையாள் 57.

ஆளும்வைகுந்தா உன்னடியருள்வாய் யென்றிரஞ்சி
மாளுஞ்செடத்தை விற்றுமாற்றாமல் தோளும்
சுமந்தேன் பெருங்கொளத்தூர் ஸ்தூபிமதில் வாசல்கண்டேன்
யமைந்தேன் வினையகன்றேன்யான் 58.

அகலாதோ உன்னாமம் அனுதினமும் போற்றினால்
புகலாதோ யெட்டெழுத்தும் பொந்தியுனுள் சுகலோக
தங்கதிருவைகுந்தம் தாவிதடாகம் வந்தாய்
செங்கைகுழல் ஒலிலெனைசேர் 59.

சேரும்வகையரியா ஜெகஜர்உடல்வெருத்து
மாரும்பொழுதளவும் வாய்திரக்கா ஊரும்
நினைத்தால் பதம்வருகும் நிர்க்கோர்பெருங்கொளத்தூர்
தனத்தோடிருந்தரி வாழ்த்தாள் 60.

தாளெடுத்துகாளிங்கன் தலைமீதிர்ரானூன்றி
வாலெடுத்து கைபிடித்து வாட்டினவா கோலெடுத்து
வைத்தாய் பெருங்கொளத்தூர் வந்தாகொழல்தொடுத்து
தைத்தோமென்றாடிச்சதா 61.

சதாகாலவஸ்துவுநீ சமஸ்த்த உயிர்க்கானவன்நீ
பதாபதமாத்மாக்களெநீ பாற்றவநீ நிதானமுள
அத்விததடாகநகர் யாண்டாண்டுலாவிவரும்
சத்விதசங்கீதனநேச்சார் 62.

சார்ந்தார்கள் வாழ்வார்ககள் சந்ததமும் வைகுந்தம்
சேர்ந்தார்கள் பொன்னறங்கன் சேவடியுள் தேர்ந்தார்கள்
யெப்போதும் யெட்டெழுத்து இரஞ்சிபெருங் கொளத்தூர்
நிர்ப்பானே கைதொழுவாய் நீ 63.

நீயேயெனக்கு நிரைந்தஉயிராவியுமாய்
தாயுங்குருதெய்வம் தந்தையுநீ மாயை
வந்துமரைக்குதந்தோ வளரவாழ்பெருங்கொளத்தூர்
முந்திகுழல் ஓசைமுயல் 64.

முயல்வாநீ யெந்தனுக்கு முயன்றஉயிர் எட்டெழுத்து
செயல்வாநீ செந்திருமால் சேவையொடு மயலொலிகொள்
ளழகுபெருங்கொளத்தூர் டமைந்துவரிபால்பசுவோ
டொகந்துசலமுனக்கொள் ஓன்னூர் 65.

வட[illegible]ரிகூட்டம உன்னைட்டினிர் பெருக
ஆடல்பெருஞ்சேவை ஆர்ப்பிக்க பாடல்மிகும்
வெண்குழலின்கையானே மிகவாழ்பெருங்கொளத்தூர்
கான்உனது பொன்னடியாலக்கார் 66.

காசிதனிலே மருணக்காலம் வலக்காதில்
ஓசைபெரும் ராமமந்திரம் முயன்றுவினை பாசமற
வைகுந்தமேல்பதத்தில் வைத்தோன் பெருங்கொளத்தூர்
கைவல்யமோதுகுழல்காண் 67

காணுமலேநெடுநாள் கலங்கிவனுமான்சாம்பன்
கோனைமல்ராகவனே கூடின்னகாண் வீணைமோ
யெல்லோரும் வாருங்கள் இசைந்தபெருங்கொளத்தூர்
நல்லோர்க்கும் வேண்காட்டுவான் 68

காட்டுவான்காட்டி கண்ணால் மடல்திரந்து
ஊட்டுவான் பொன்னடிக்குளுத்தமனும் பூட்டதிகம்
முள்ளபெருங்கொளத்தூர் முத்தன்றிருக்கோவில்
உள்ளப்புகுந்தான்குழலோட் 69.

இன்றைக்குதானோ யிருந்தானிதற்குமுன்
மண்ணுக்குகந்த மணிவண்ணன்காண் யெண்ணேக்கும்
இருந்துபெருங்கொளத்தூர் இசைந்துவரிபாலனுக்கு
தருந்துபெருஞ்சேவை தந்தான்தான் 70.

தானே திருக்கோவில் தமைத்தோமென்றெண்ணுவரோ
வானோர்பணியும் வைகுந்தவர்க்கும் கோனே
கொழலூதுவான்பசுவை கூட்டுந்தடாகமதில்
கழலோத கேட்டிருப்பான்காண் 71.

கண்டமதிலேவிஷத்தை கலந்தவனுமா மரையே
கோண்டவனுமேற்றிகுரித்திடுமால் தொண்டருளம்
நிரைந்து பெருங்கொளத்தூர் நிர்ப்பான்குழட்காரத்தோட்
டேரந்துச் சுரமோதுவான் 72.

ஓதவுமெய்வேணுதொனி ஒக்கதிருவாய்மொழியும்
மோதமரைநான்கு மொரைபெருக சாதுவர்கள்
அரீபஜனைகூற அடியார்குழாமெனவும்
தரிகும்தடாக நகர்த்தாள் 73

தான்தான் செய்தவினை தானே அனுபவிப்பார்
நான்தானென்றே மொழியைகாட்டாதே கோன்நான்
யெல்லார்க்குந்தந்தை இயல்கொள்பெருங்கொளத்தூர்
நல்லோன்குழல் தொனிக்குள்நாடு 74.

நாடாதிருந்தால்நீ நம்மைநமன்பிடிப்பான்
போடாவென்றாலு மவன்போகானே மாடேறும்
யீசன்தொழும்பதத்தைஇரஞ்சிப்பெருங்கொளத்தூர்
வாசன்குழலானே வாழ்த்து 75.

வாய்த்தமகனென்றாகும் மைத்தொருவனே தனவும்
சாய்த்தமுடிபொருந்த தணல்பெருக்கி தோய்த்தவுடன்
சம்மதித்தாயன்று தடாகமதனிற்குழலோட்
உம்மதிப்பையார் புகல்வாருள் 76.

உள்ளும்புறம்பாகி யோருருவாய்நின்றாய்நீ
வெள்ளம்பிறளயத்தில் மிகவாலின் மெள்ளதின்மேல்
படுத்துஎழுந்தாண்டாய் பகாக்கொள்பெருங்கொளத்தூர்
தொடுத்தாய்குழலோட்த்தொனி 77.

தொனிகேழ்க்கவேணுமென்று தோழன்கொசேலருமே
கனிவோடுகையிலவல்கண்டளிக்க தனிமாதர்
அஷ்டலக்ஷிமிக்கும் அளித்தாய்தடாகனே நீ
கஷ்டமெலாந்தீர்த்து யெனைக்கார் 78.

காருமல்ஜானகியே கானகத்திலாலதின்மேல்
மாணுக்கனெக்கண்டமாயவனே கோணுமல்
வந்தானடிவிழுந்தான் வாழ்த்தும் பெருங்கொளத்தூர்
யெந்தாய்நீ யேந்துகுழல்யீசா 79

யீசாஉன்பொன்னடியே யெப்போதும் போற்றுவர்க்கு
கூசாதவர்க்குபதம் குறையுமோ லேசாக
எண்ணுத்தடாகநகர் இரவாகைவேணுவனே
கண்ணாவுன் சேவடியுள்கார் 80

காட்டாமர்கர்த்துணிர் கனிந்தாயிறணியன்முன்
தோட்டாளன் தட்டதிரந்துரைந்தாய் கேட்கேந்த
மைந்தன் பிறக்லாதன் மரிவித்தொழுங்கொளத்தூர்
விந்தேபெரும் வேண்குழக்கொள்வேற் 81.

லோர்யெனக்குன்னை விட்டால்பரந்தாமா
ஆரார் யென்றாலவருமாவாரோ பேரார்
உன்னடியேபோற்றினோர் ஒன்னூட்பெருங்கொளத்தூர்
பன்னிருவாழ்வார்களை நீபார் 82.

பார்த்தவனைலானமட்டும் பரிந்துரிந்தான் சேலையெல்லாம்
சார்த்தியென்றுஒலமிடுந் தய்யலறை பூர்த்திபடா
தலைந்தான் துர்ச்சாதனனும் தங்கபெருங்கொளத்தூர்
பலங்கள்கொழுல் பேந்துவனைப்பார் 85489 83.

யாப்பானைபோல பரிந்துகந்து. வையவர்கள்முன்
வாய்ப்பானமங்கை மணமாலைசயம் பேறப்பாயின்
திருக்குதவாருங்கள் யென்றாய்யெருங்கொளத்தூர்
பொருப்பதுவேன் யோதினையப்யோது 84

போதப்பொருளானே பொன்மபனே யெந்தையுன்மேல்
ஓதப்பெருங்கருணைக்குத்தோனே கீத்ததோ
டொத்துபெருங்கொளத்தூர் ஓகந்துபெருவெண்குழல்கை
வைத்தாதுமாதவனே 85.

வாழ்ந்து வொருமங்கை மகவதுவைவிட்டகன்றுன்
ஆழ்ந்தமண்ணில் காலாலரைத்தனனே தாழ்ந்தழுக
பண்டரிநாதன்செயலே பாறமென்றுன்கொளத்தூர்
புண்டரீகன் குழலைப்போல் 86.

போவோஞ்சுகவானே போற்றுவோமென்றுகந்த
தேவியரைகட்டிசிரையிலிட்டான் கூவியழ
வந்தாநீயோர்மாதா வவளையவிழ்த்துன்னடிக்குள்
தந்தாய் கொளத்தூர் கொழலோட்டாய் 87.

தங்கத்தகடதினுந் தானதிமாற்றுயர்வோன்
யெங்கள்பரந்தாமன் இங்கிருக்க உங்களுக்கேன்
வாட்டம்பெருங்கொளத்தூர் வருவீர்கள்யெல்லோரும்
கூட்டம்பசுக்கோனே கோர் 88.

கோராதையென்றுறித்திக் கொண்டவிரணியனை
மாராதுடல்கிழித்தமர்த்தவனே நேராக
நிற்கும்பிரகலாதன் நிதியோன்தொழுங்கொளத்தூர்
உக்கிரகுணசிப்மவள றார் 89.

ஊரேபெருங்கொளத்தூர் உள்ளாறனக்கானோர்
பேரோதினைந்துதித்தால் போதுமே சீர்பதத்தை

கண்டால்வினை கலங்கும் கையில்வேணுவையொடு
தண்டாமலர்ப்பதத்தைதா. 90.

காராயோயொன்சேவே ததும்புமடியார்கள்வினை
ஆராயமாயருக்கும் புண்ணியனே காராயோ
அரிபாலன்சேஷசுதன் பருள்க்கொள்பெருங்கொளத்தூர்
பிரியாதொனிக்குழலைப்பேண் 91.

பேடியுருவாக்கிநடுப் பிலங்கொள்விஜயனுக்கு
நாடியுன்னைட்புரந்த நங்கையனை கூடிவிட
செய்தாய் பெருங்கொளத்தூர்—ஸ்ரீவேணுநாதா நீ
மெய்தாயிடத்திலிராமே. 92.

ராமாமிரதத்தை நவின்றுவிலங்கியானுள்
பூமானைதேடிபுலப்படுநாள் சேகாமானும்
ராக்ஷதபடையாவும் நரிக்கிசிரை மீட்டுயென்னுள்
ஆக்ஷிகொழலோட் கொளத்தூரான். 93.

கொளத்தூர் நகருடையான் கோட்டைமலையாளன்
யெளத்தோரை கைதூக்குமெந்தயோன் தொளைத்தகுழல்
பிடித்தூதும்நாதன் பிதாதந்தையாதவன்தாள்
பொடித்துளனிந்துநிதம்போற்று. 94.

போற்றதென்கூற்றன் போய்கண்டுதோற்றிடுவான்
யேற்றிதுதித்தவர்களெல்லவரும மாற்றுயர்ந்த
பொன்றங்கன்கோவில் புகுந்தார்பெருங்கொளத்தூர்
வன்னறங்கன் நர்க்குழலைவாழ்த்து. 95.

வாழ்தவுன்னைதேவருக்காய் மகிழ்ந்துகடல்கடைய
வேத்துருவாய்கூர்ம்மமிகவான பாத்தியனே
செக்கடிநாட் புஷ்க்கறணி சீதராகுழலுடையா
மெக்கடியே நீ கொடுத்தாள்மேல் 96.

மேலும்பிறுகி தென்பார்மேர்வுதிக்குள்மக்வாகம்
மீளுமுசுந்தனதிமுத்திரத்துள் நாலுபுரம்
திவ்யஸ்தலத்திற்குள் திருவாழ்பெருங்கொளத்தூர்
ஓவ்விக்குழல்தொனித்தவூர். 97.

தொனித்தக்கெருடனிகம் தோற்றத்தால் கோவசியன்
தனித்தபலிசெட்ளனரிபாலகுணன் குனித்தவனும்
தடாகநகர்கோவிலினுட்டாள்பிடிக்கனூற்வாரோட்
விடாதவருள் கொண்டவொலிவேண். 99.

வ்ணுமென்றெண்ணளும் மிதனல்யுகாயுகமாய்
தானுங்களே மிகுத்ததுஷ்டர்களே நாணவுமே
த்தபெருங்கொளத்தூர் பாச்சியசன்னியவெண்கறத்தோட்
ரித்திசுறரேக்காற்றுய்நீ 100.

ங்காதிருக்கோவில் நிரைந்தநகர்மேர்பாலும்
ாங்கானதீரத்தனுமான்பகர்மலைக்கீழ் தேங்காமல்
குந்தாய் பெருங்கொளத்தூர் மேதினியோர்போற்றமுயர்
சுகந்தா குழல்கொள்ச்சுகா. 101.

சூல்தறகயர் ஒன்கைக்குள் சுறிக்கிப்பிடித்திழுத்து
யீசுவரர்க்குமீசுறனுயிருந்தோனே தாஸருக்குள்
பெண்ணுள்மிருந்தவராள் யிசைகட்டும் வல்லானே.
ண்ணுகொழல் கொளத்தூர் கோன். 102.

65489

நருகாமுன் காய்குவியாமுன்பல்கள்விழுந்
தூருகாமுன்யேமன்றுடிமிகுத்து வருகாமுன்
பெச்சரித்துஉன்பதத்துள் யேர்ப்பாய்பெருங்கொளத்தூர்
அச்சுதனே நிச்சய மிதுவா. 103.

பாவென்றால் நீயும் வருவாயோபென்னைவிட்டு
போவென்றால் யெப்போதும் போவாயோ தாவொன்றே
என்குணத்துள் உன்குணத்தைஇசைந்தாய்பெருங்கொளத்தூர்
தன்குணத்தோனின்னகரிர்ச்சார் 104.

சான்ரோர்கள் நல்ல சர்வசாம்ராச்யமெல்லாம்
பூண்டார்கள்வைகுந்தபுரம் நினரூர் மாண்டாரோ
நலமேலார்கள் சேவைநவிலும் பெருங்கொளத்தூர்
வெல்லாம்வளர்க்கொழல்க்கொள்வேன் 105.

வெண்பாவந்தாதி வேணுநின்மேல் தூர்பாடல்
அன்பாதுதித்தேனனுதினமும் தென்பாக
காற்பாய் பெருங்கொளத்தூர் கண்ணுஉன் ஆள்வீரவன்
நேர்ப்பாய் இன்னுட் வாழ்கநீ 106.

நீவாழிசங்குசக்ரநிஜவாளுங்கோதண்ட
மாவாழிபாணமகிழ்கெதையும் யாழ்வாதி
யெல்லோரும்வாழி இயல்கொள்பெருங்கொளத்தூர்
வல்லோனே யேற்றவரும்வாழி. 107.

ஸ்ரீராமசகாயம் முற்றிற்று.